செய்தி வெளியீடு எண்.70 நாள்.02.02.2017

# திருவள்ளூர் மாவட்டத்தில் தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் 06.02.2017 தொடங்கி 9 மாதம் முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை கூட்டுத் தடுப்பூசி வழங்கும் முகாம் நடைபெற உள்ளது.

மணல்வாரி அம்மை நோய் பாதிப்பினால் பிறக்கும் குழந்தைகளுக்கு பலவித பிறவிக் குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தட்டம்மையினால் கண்பார்வை இழப்பு மற்றும் மூளை அழற்சி நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை நோயினைத் தடுக்கும் பொருட்டு தடுப்பூசி மருந்து அரசால் இலவசமாக அளிக்கப்பட உள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் மற்றும் பள்ளி செல்லா குழந்தைகள் என 9 மாதம் முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் என மொத்தம் 5,60,704 குழந்தைகளுக்கு 1977 அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் 1787 அங்கன்வாடி மையங்களிலும் மற்றும் அனைத்து கிராமங்களிலும் முகாம்கள் அமைக்கப்பெற்று தடுப்பூசி அளிக்கப்பட உள்ளது.

இம்முகாமில் 483 சுகாதாரத் துறை பணியாளர்கள், 1209 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆக மொத்தம் 1692 எண்ணிக்கையிலான நபர்கள் 403 குழுக்கள் மூலமாக ஈடுபடுத்தப்படவுள்ளனர். இந்த தடுப்பூசி முகாம் மிகச் சிறப்பாக நடைபெற மாவட்ட ஆட்சியர் தலைமையில் கூட்டுமன்றக் குழு கூட்டம் 24.01.2017 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருவள்ளூர் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், பூந்தமல்லி துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், திருவள்ளூர் இணை இயக்குநர் மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள், திருவள்ளூர் துணை இயக்குநர் மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள், முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட தொடக்க கல்வி அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்ட அலுவலர், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அனைத்து துறையினரும் ஈடுபாட்டுடன் இம்முகாமில் தன் பணியை ஆற்ற மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியதுடன், 9 மாதம் முதல் 15 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இம்முகாமின் மூலம் தடுப்பூசி பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**
~~~~~